உ

சிவமயம்

“மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்”



# நாவலர் நீதிவாக்கியங்கள்

மக்களுக்கு நல்லறிவைப் பரப்பும் நோக்கமாக,

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால்,

அச்சிடப்பெற்றது.

2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் நீதிவாக்கியங்கள்

1. இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி, முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

2. இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது, நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

3. கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும் அதனால் எய்தும் பலனையும், உனக்குப் போதிக்கும் அருள்வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை, ஆதலால், அவரை ஒரு காலமும் மறவாதே.

4. ஈசுரபக்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

5. தீவிரமாயேனும் மந்தமாயேனும், நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.

6. நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழிவையாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.

7. சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரம் அன்றி, பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசப்படுகின்றவர் களே உத்தமர்.

9. எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும், முற்றறிவு உடைய கடவுள் அறிந்து, பயன் அளிப்பார் பிறர் அறிந்தென்! அறி யாதிருந்தென்!

10. தன்பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான், அவ்வற்ப இன்பமோ மிக இழிந்தது.

11. அறிவும் அதனால் ஆகிய நற்குண நற்செய்கை களும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப் படுவதற்கு யோக்கியனாய் இரு.

12. நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்து புகழ்தல் தக்கது அன்று.

13. அடக்கம் உடைமை பாலியர்களுக்குச் சிறந்த ஆபரணம்.

14. நாம் செல்வத்தையும் உபசரிக்கப்படுதலையும் நம்முடைய பிரீதிக்கு மாறாக இகழ்தல் கூடும். நல்லொழுக்கத்தையோ அப்படி இகழ்தல் கூடாது.

15. சுசியுடைமை சரீரத்திற்கு ஆரோக்கியத்தையும், மனசுக்கு இதத்தையும் வளர்விக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நீ பிறர்க்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யுமுன், அது உன்னால் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்து கொள்.

17. இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றே யாயினும், தீதேயாயினும், அதுவே பெரும்பான்மை யும் மரணபரியந்தம் அவனைத் தொடரும்.

18. நமக்கு நல்லொழுக்கமும் புகழும் இன்பமும் வருதல் தவிர்தல்கள், முறையே பெரும்பான்மை யும், நமது நற்சார்பு தீச்சார்புகளால், ஆகும்.

19. நாம் இரகசியமாகக் குற்றஞ் செய்யும் போது, பிறர் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக் கொள் வோமாயினும், நம்முடைய மனம் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக்கொள்ள மாட்டோமே.

20. நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப் பயிலல் வேண் டும். பயில்வோமாகில் மேலே பெருந்துன்பங் களையும் சகிக்கவல்லர் ஆவோம்.

21. உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

22. மனத்திருத்தியிலும், சரீராரோக்கியத்திலும், நற் குண நற்செய்கைகளை உடையராய் வாழ்தலி லுமே அன்றி, திரவியத்திலே இன்பம் ஜனியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. வருவாய்க்குக் தக்க வாழ்க்கை இல்லாதபொழுது செல்வராவார் ஒருவரும் இலர். அது உள்ள பொழுது வறியராவார் மிக அரியர்.

24. கடன்படும் செல்வர்களிலும், கடன்படா வறியவர் களே மிகுந்தசுகம் உடையவர்கள்.

25. கோட்கேட்பவன் இல்லையாயின், கோட்சொல்ப பவனும் இல்லை.

26. பிறருக்கு வரும்கல்வி செல்வங்களைக் காணும் பொழுது, பொறாமை இன்றி மகிழ்தலே நன் மனசுக்கு அழகு.

27. நாம் செய்த குற்றங்களை நாமே வெளிப்படுத்திப் பச்சாத்தாபப்படுவோமாயின், அறிவினால் மூத்த பெரியோர்கள் நம்மேல் இரங்கி, அவைகளைப் பொறுத்துக் கொள்வார்கள்.

28. நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சிநேகிதர்கள்.

29. நம்மேல் அன்பு இல்லாதவர்கள் மேலும், நாம் அன்பு உள்ளவர்களாயே இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. பிறர் உனக்குச் செய்த குற்றங்களினாலே உனக்குக் கோபம் தோன்றும் பொழுது, நீ பிறருக்குச் செய்த குற்றங்களை நினைப்பாயாகில் அது அடங்கி விடும்.

31. நம்முடைய செயல்கள் அனைத்தும் சுருதிக்கும் யுக்திக்கும் இசைந்திருக்க வேண்டும்.

32. பிறரிடத்திலே நமக்கு குற்றம் என்று தோன்றுபவைகளே நம்மிடத்தில் நமக்குக் குற்றம் என்று தோன்றாமை பக்ஷபாதத்தினால் அன்றோ?

33. அறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களை நிந்திப்பவர்கள், அறிவையும் நல்லொழுக்கத்தையுமே நிந்திக்கிறார்கள்.

34. தரித்திரனாய் இருக்கும் போது திருத்தி அடையாதவன் செல்வனாயபோதும், திருத்தியடையான் திருத்தியடையாமை மனக்குற்றமேயன்றிப் பொருட்குற்றம் அன்று.

35. அதிக வருத்தத்தோடு உன்னைப் பெற்றுவளர்த்த பிதா, மாதாக்களை நீ என்ன வருத்தப்படினும், மறந்தும், கைவிடாமலும் அன்போடு காப்பாற்று.

36. உன்னால் உன் தாய் தந்தையருக்குக் கிடைத்த உபசாரமே, அது கண்ட உன் பிள்ளைகளால் உனக்கும் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37 பிரயோசனம் இல்லாத சொற்களைச் சொல்லுவோன் அறிவாகிய உள்ளீடு இன்மையால் மனிதருக்குள்ளே பதர் என்று சொல்லப்படுவான்.

38. பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயில், பாவம் செய்பவர்களும் இலர், ஆதலால் பாவஞ் செய்பவர்களினும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்.

39. பிறருடைய இன்சொற்கள் தனக்கு இன்பம் தருதலை அநுபவித்து அறிகின்றவன் அது நிற்க, கடுஞ்சொற்களைப் பிறரிடத்தே வழங்குவது என்ன பயன் குறித்து.

40. எவ்வகைப்பட்ட பெரிய நன்றிகளைக் கொன்றவனுக்கும் உய்வு உண்டாம், செய்ந்நன்றியைக் கொன்றவனுக்கு உய்வு இல்லை.

41. பாவம் செய்ய ஏவுகின்றவன், செய்கின்றவனோடு, சமமாகத் தண்டிக்கப்படுவான்.

42. பகைவர்,அயலோர் நட்பினர் என்னும் இம்மூவகையோரிடத்தும், தருமத்தின் வழுவாமல் ஒப்ப நிற்றல் நடுவுநிலைமை எனப்படும்.

43. பொய் கூறலாகிய பாவம் ஒன்றை ஒழிப்பின், அதுவே நெறியாக மற்றப் பாவங்கள் அனைத்தும் தாமே ஒழிந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. ஒரு பொய் சொன்னவன், அதைத் தாபிக்கப்புகின், ஒன்பது பொய் சொல்லல் வேண்டும்.

45. காரணம் பற்றியாயினும், அறியாமையால் ஆயினும் ஒருவன் உன்னிடத்துத் தீங்கு செய்தபோது, நீயும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்துக் கொள்.

46. திரவியம் எல்லார்க்கும் எந்நாளும் அவசியம் வேண்டுவதாய் இருக்கையால், அதனை விரைந்து சம்பாதிக்க வேண்டும்.

47. திரவியம் தேடுதற்கு முயற்சியே சிறந்த கருவி.

48. சரீரவருத்தத்துக்கு அஞ்சிப் பிறதொழில்களைச் செய்து பொருள்பெற்றும் உணவின் பொருட்டு வேளாளரிடத்துச் செல்லவேண்டுதலாலும், பொய் முதலிய பாவம் கலவாமையாலும், வேளாண்மைக்கு நிகராவது ஒன்றுமில்லை.

49. செல்வம் முதலியவற்றினாலே செருக்கு அடைந்து, முன் உன்னோடு பயின்ற சிநேகிதரை மறந்து விடாதே.

50. பாவத்துக்கு அஞ்சிப் பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. பாவத்தால் வந்த பிறன் பொருளைப் பங்கிட்டு உண்பையாகில், தரும் பொருளுடையானையும், பாவம் உன்னையும் அடைந்து, உன் சந்ததி நாசம் அடையும்.

52. பிறர் பொருளானது, உடல் உயிர் இரண்டிற்கும் ஊறு செய்தலால் உடல் ஒன்றிற்கே ஊறு செய்யும் விஷத்திலும் கொடியதாம்.

53. பிறர் பொருளைக் கவர்தற்குப் பலவகையால் வன்மை இருந்தும் அது செய்யாதவன் எவனோ, அவனே அவருக்கு அப்பொருள் அனைத்தையும் கொடுத்தவன் ஆவான்.

54. இரப்போருக்குப் பொருள் கொடுத்தவன் அக் கொடை தன் உயிரை விடாது மறுமையினும் தொடர்தலால்,அப்பொருளை மாத்திரம் இழந்திலன்.

55. உண்ணும் வகையறிந்து உண்ணுதலும், உண்ட பின் நூறடி உலாவுதலும், பகலிலே நித்திரை செய்யாமையும், வாரந்தோறும் எண்ணெய் இட்டுத் தலைமுழுகுதலும் உளவாயின், உடம்பிலே நோய் உண்டாகாது.

56. நீ உன் உடம்பை வளர்த்தற்குப் பிறிதொன்றன் உடம்பை உண்பையாயின், எவ்வகையால் அருளை ஆளுவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. உன் உள்ளத்திலே செல்வமிகுதியால் அகந்தை தோன்றுமாயின், உன்னின் மிக்காருடைய செல் வத்தையும், வறுமை மிகுதியால் துக்கந்தோன்று மாயின், உன்னின் இழிந்தாருடைய வறுமையை யும் நினை. நினைப்பாயாகில், அகந்தை துக்கங் கள் உன்னை எக்காலத்தும் அணுகாவாம்.

58. சூதாடலானது ஒன்றினை முன்பெற்று இன்னும் பெறுவேன் என்னும் கருத்தால் நூற்றினை இழந்து வறியன் ஆதற்கு ஏதுவாம். ஆதலால், அதனை ஒரு பொழுதும் நினைத்தலும், செய்யாதொழி.

59. சூதாடலை விரும்புவாய் ஆயின் காலமும் கருத்தும் பெறப்படாமையால் கல்வி, செல்வம், ஊண், உடை என்னை அடையாவாம்.

60. நன்மை தீமையைப் பகுத்தறியும் அறிவை மயக்கி அது பயக்கும் ஒழுக்கத்தைக் கெடுத்தலால், கள்ளுண்டலே பாவத்துக்கெல்லாம் தலையாயது.

61. கண்டவிடத்து முக மாத்திரம் மலரும்படி சினே கிப்பது சினேகம் அன்று. அன்பால் உள்ளமும் மலரும் படி சினேகிப்பதே சினேகம் ஆகும்.

62. நீ உன்னில் மெலியாரை வருத்தச் செல்லுமிடத்து, உன்னின் வலியவர் உன்னை வருத்த வரும்போது அவர் முன் அஞ்சி நிற்கும் போது உமது நிலையை நினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. பிறிதோர் உயிர்க்கு வந்த நோயைத் தனக்குவந்த நோய் போலக் குறிக்கொண்டு காப்பாற்றா விடத்து அறிவினாலே பயன் யாது?

64. நீ பிறனொருவனது பழியை அவன் புறத்திலே சொல்லுவையாயின், அவன் உன் பல பழிகளுள்ளும் நீ மிக வருந்தும்படி, அதிகமாகிய பழிகளை ஆராய்ந்து உன் எதிரே சொல்லுவான்.

65. ஒருவன் எவ்வெப்பொருளினின்றும் நீங்கினானோ அவன் அவ்வப் பொருளினால் வரும் துன்பத்தை அனுபவித்தல் இலன்.

66. எந்த நாட்டையும் எந்த ஊரையும் உன் நாடும் உன் ஊரும் ஆக்குவது கல்வி, ஆதலால், அதனை இளமை தொடுத்து மரண பரியந்தம் விடாமற் கல்.

67. சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன் நித்திரை விட்டு எழுந்து தந்த சுத்தி செய்து கடவுளை வணங்கிக் கொண்டு உன் பாடங்களைக் கற்பாயாயின், அவைகள் உன் மனசிலே நன்றாகப் பதியும்.

68. ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே கல்விக்குச் சிறந்த கருவி.

69. அழிவு உள்ளதும் துக்கமயமுமாகிய உன் சரீரத்தை தம்பயன் கருதிப் பெற்று வளர்த்த உன் தாய் தந்தையரினும், அழிவு இல்லதும் இன்பமயமுமாகிய உன் அறிவை பயன் கருதிப்பெற்று வளர்த்த உன் ஆசாரியரே மேலானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. நீ வருந்திக்கற்ற நூலை மறக்கவிட்டு வேறு நூலைக் கற்றல், கையிலே கிடைத்த பொருளை எறிந்து விட்டு வேறு பொருள் அரிப்பரித்துத் தேடல் போலும்.

71. சபைக்கு அஞ்சி நடுங்கும் வித்துவான்களிடத்தில் கல்வியும், சபைக்கு அஞ்சாத மூடர்களிடத்தில் ஆரவாரச் சொற்களும், உண்டாதலினும் உண்டா காமையே நன்று.

72. உன்னை யாவரும் வியக்கக் கருதி நீயே உன்னைப் புகழ்தல், விளக்கைப் பிரகாசிப்பிக்கக் கருதி அதனது தகழியில் நீரை வார்த்தல் போலும்.

73. செல்வம் கல்லாதவரைக் கெடுக்கையாலும், வறுமை கற்றோரைக் கெடாமையாலும், கல்லாரி டத்து உண்டாகிய செல்வம், கற்றவரிடத்து உண் டாகிய வறுமையினும், மிகத்துன்பஞ் செய்வதாம்.

74. செல்வம் உள்ள மூடரினும், வறுமை உள்ள வித்து வான்களே எங்கும் நன்குமதிக்கப்படுவர்கள்.

75. செல்வம் அழிவு உள்ளது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவுள்ளது. கல்வி அழிவில் லாதது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவில்லாதது.

76. உடம்போடு அழிதலால் பயன்படாச் சாதியுயர்ச்சி இலராயினும், உயிரோடு செல்லுதலாற் பயன் படும் கல்வியுயர்ச்சி உடையவரே மேன்மக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. கல்வியறிவால் ஆகிய மூப்பே மூப்பு. ஆதலால், அதனை உடையவர்களே யாவராலும் வணங்கப் படத்தக்கவர்கள்.

78. அநித்தியமும் சடமுமாகிய உன் சரீரத்தின் பிதா மாதாக்களுடைய சொல் நித்தியமும் சித்துமாகிய உன் ஆன்மாவின் பரமபிதா மாதாவாகிய கடவுளது சொல்லாகிய வேதாகமங்களுக்கு விரோதம் இல்லாவழி அமைந்து நட.

79. அருட்செல்வமே அறிவுடையோரிடத்து மாத்திரம் உளதாகி எவ்வுயிர்களாலும் நன்கு மதிக்கப்படும் பெருஞ்செல்வம்.

80. நேற்றைக்கு உளன் எனப்பட்டான் இன்றைக்கு இலன் எனப்படுதல் கண்டும், உன் உயிர்க்குப் பயன்படுவனவற்றைச் செய்யாது, வீண் நாட்கழிப் பது, ஐயையோ எவ்வளவு அறியாமை!

81. நாவை அடக்கி விக்கல் எழும்போது ஒன்றைச் செய்தலே அன்றிச் சொல்லலும் கூடாமையாலும், அது இன்ன காலத்தில் வரும் என்று அறிதல் இயலாமையாலும், மோட்சத்துக்கு ஏதுவாகிய புண்ணியத்தை விரைந்து செய்.

82. நாம் சிற்றறிவு சிறுதொழில் உடையோம் ஆதலால், முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவபுண்ணியங்களை உள்ளபடி அறித லும், பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும், நம்மால் இயலாவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு:
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 15.00

பாரதி பதிப்பகம், 430 காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org